23—

கூட்டுறவுச் சங்கம்

***13104—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1999-2000 ஆம் ஆண்டில், அதாவது தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கையிருப்பு குறைவு, முறைகேடாக உரம் மற்றும் பினாமிகள் கடன் வழங்கியது போன்ற காரணங்களால், சங்கம் வாழ்வாதாரத்தை இழந்தது. அதனால், 8-9-2003 அன்று இச்சங்கம் கலைக்கப்பட்டது. இச்சங்கத்தைப் புத்துயிரூட்ட வேண்டுமென்று சங்க உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், நம்முடைய அம்மா அவர்களுடைய அரசால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 27-4-2012 முதல் இச்சங்கம் மீண்டும் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியிலே உள்ள அந்தியூர் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட நிலைப்பாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்*

சென்றதற்குப் பின்பு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை புனரமைப்பு செய்து, அரசாணை பிறப்பித்து, உரிய நடவடிக்கை எடுத்தார்கள். அதற்காக அந்தப் பகுதி விவசாயிகளின் சார்பில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது கோடானு கோடி நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபொழுது அந்தச் சங்கமானது புனரமைப்பு செய்யப்பட்டு, பயிர்க் கடன்கள் வழங்கப்படுகிறதாகவும் கூறினார்கள். அந்த இரண்டு கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளிலே அதிகமான விவசாயிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அதிக அளவில் பயிர்க் கடன் கிடைக்கக்கூடிய வகையிலே, தற்போது 15 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு வருவதை, ஒரு கோடி ரூபாய் வரை உயர்த்திக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டில், பயிர்க் கடன் வழங்கப்பட்டதைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின்மூலமாக 25 இலட்சம் ரூபாய் கிரஷ் கடன் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 38 உறுப்பினர்களுக்கு 15 இலட்சம் வரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு 20 உறுப்பினர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை பயிர்க் கடன் வழங்குவதற்கு தற்போது கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

2012 நவம்பர் 2]

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு ஒருங்கிணைந்து, அந்த விவசாயப் பெருமக்களுடைய நலன் கருதி, அங்குள்ள விவசாயிகளுக்கு நகைக் கடன் கொடுக்கக்கூடிய வகையிலே, C.R.D.F. நிதித் திட்டத்தின்மூலமாகக் கடன் கொடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொண்டு, அதோடு, எங்களது பகுதிகளிலே 18 Settlement பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு ரேஷன் பொருட்கள் சரியாகக் கிடைப்பதில்லை. அங்கே நடமாடும் ரேஷன் கடைமூலமாக பொருட்களை வழங்குவதற்கு இராமநாதபுரம் மற்றும் மானுபட்டி ஊராட்சியிலும், தளி பேரூராட்சியிலும் தொடக்க வேளாண்மை சங்கத்தின்மூலமாக உரிய முறையிலே ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு, நகைக் கடனுக்குப் பாதுகாப்புப் பெட்டகக் கட்டடமும் கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுதான் அந்தச் சங்கம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் புனரமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. சிறப்பான ஒரு பணியைச் செய்வதற்காக, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல ஆலோசனையைப் பெற்று, அந்தச் சங்கம் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.